# ஆதார் சேவை மையங்களை அதிகரிக்க வேண்டும்!

## ஒன்றிய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவிடம் தமிழச்சி தங்கபாண்டியன் நேரில் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.14-

தென்சென்னை தொகுதி எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் டெல்லியில் நேற்று ஒன்றிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவை நேரில் சந்தித்தார். அப்போது ஆதார் சேவை மையங்கள் தொடர்பான கோரிக்கை மனுவை அளித்தார்.



அந்த மனுவில் கூறப்பட்டு இருப்பதாவது:

ஆதார் புதுப்பிப்பு மற்றும் திருத்தச் செயல்பாட்டில் குடிமக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை உங்கள் கவனத்துக்கு கொண்டுவருவதே இதன் நோக்கம். சிறிய திருத்தங்கள் அல்லது புதுப்பிப்புகளுக்குக்கூட மீண்டும் மீண்டும் அலையவிடுவது, நீண்ட வரிசைகள் மற்றும் நிராகரிப்புக்கான காரணங்கள் அல்லது தேவையான ஆவணங்கள் பற்றி தெளிவாக பதில் கொடுக்காமல் இருப்பது என பல புகார்களை மக்கள் தெரிவிக்கிறார்கள்.

பல நகர்ப்புற மற்றும் புறநகர்ப் பகுதிகளில், மக்கள்தொகை அடர்த்தியுடன் ஒப்பிடும்போது ஆதார் சேவை மையங்கள் போதுமானதாக இல்லை. எனவே ஆதார் சேவை மையங்களை அதிகரிக்க வேண்டும். குறிப்பாக மக்கள் அடர்த்தி அதிகமாக உள்ள நகரங்களில் கூடுதலாக திறக்க வேண்டும். தேவையற்ற நிராகரிப்புகளைக் குறைக்க புதுப்பிப்பு மற்றும் திருத்த செயல்முறையை நெறிப்படுத்த வேண்டும். ஆன்லைன் சந்திப்பு மற்றும் வரிசை மேலாண்மை அமைப்புகள் போதுமான டோக்கன் ஒதுக்கீட்டில் நம்பகத்தன்மையுடன் செயல்படுவதை உறுதிசெய்ய வேண்டும். மேலும் தேவையான அறிவுறுத்தல்களை சேவை மையங்கள் மற்றும் பிற சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டு உள்ளது.

---

### ஒன்றிய அரசு ‘வந்தே மாதரம்’ விவாதத்தை எழுப்புவது

# மக்கள் கவனத்தை திசை திருப்பும் அரசியல் நாடகம்!

## மாநிலங்களவையில் ராஜாத்தி சல்மா குற்றச்சாட்டு!

புதுடெல்லி, டிச. 14-

**“ஒன்றிய அரசு, வந்தே மாதரம்” விவாதத்தை எழுப்புவது மக்கள் கவனத்தை திசை திருப்புவதற்கான அரசியல் நாடகம்'' என்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் ராஜாத்தி சல்மா குற்றஞ்சாட்டினார்.**

மாநிலங்களவையில் கழக உறுப்பினர் ராஜாத்தி சல்மா பேசியதாவது:–

என்னைப்போல தமிழ்நாட்டின் ஏராளமான பெண்களுக்கு உரிமைகளையும் சுதந்திரத்தையும் பெற்றுத்தந்த தலைவர் கலைஞர் அவர்களுக்கும் இந்த நாட்டின் எந்த ஒரு உயர்ந்த நிலைக்கும் ஒரு சமூகத்தினர் வந்து விடக்கூடாது என்று நம்புகிற செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய கட்சி ஆட்சிக்கு மத்தியில் ஒரு சிறுபான்மை சமூகத்தைசார்ந்த பெண்ணான எனக்கு இங்கேவந்து பேசுவதற்கு வாய்ப்பை தந்திருக்கக்கூடிய திராவிட மாடல் அரசின் முதல்வர் தலைவர் மு. க ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொண்டு எனது முதல் பேச்சை துவக்குகிறேன்.

‘இந்தியா ஒரே பாடலால் ஒன்றாக வில்லை, ஒரே மதத்தில் ஒன்றாகவில்லை. நியாயத்தால், சமத்துவத்தால், மனிதநேயத்தால் , சமூக நல்லிணக்கத்தால் தான்ஒன்றானது. இன்று நான் பேச விரும்புவது மிகவும் முக்கியமான ஒரு விஷயம். அது ”வந்தேமாதரம் பற்றி நாம் முடிவில்லா விவாதத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் போது, இந்தியா எதிர்கொள்ளும் உண்மையான பிரச்சினைகள், உண்மையான ஒற்றுமை பற்றிய சவால்கள் என்ன? மற்றும் ”எப்படிநம் நாட்டை உண்மையாக ஒன்றுபட்டநாடாக மாற்றலாம்?

இது நாட்டின் ஒற்றுமைக்காக கொண்டுவரப்பட்ட விவாதமல்ல. வரவிருக்கும் மேற்கு வங்க தேர்தலை முன்னிட்டு, காங்கிரஸையும் ஜின்னாவையும் குற்றம்சாட்டும் பழைய பிரிவினை அரசியலை மீண்டும் உயிர்ப்பிக்க BJP முயல்கிறது. உண்மையான பிரச்சினைகள் இருக்கும்போது, தேர்தல் நன்மைக்காக ‘வந்தே மாதரம்’ விவாதத்தை எழுப்புவது மக்கள் கவனத்தைத் திசை திருப்புவதற்கான அரசியல் நாடகம் தவிர வேறொன்றுமில்லை.

**அரசியலுக்காகப் பயன்படுத்துகிறார்கள்!**

இதற்கு எங்கள் எதிர்ப்பு காரணம் தெளிவாகவே உள்ளது: விலை உயர்வு, வேலையின்மை, வளர்ச்சி போன்ற மக்களின் உண்மையான வாழ்வுப் பிரச்சினைகளிலிருந்து கவனத்தைத் திருப்ப உணர்ச்சி அரசியல் திட்டமிட்ட வகையில் பயன்படுத்தப்படுகின்றது. மேலும், வரவிருக்கும் மாநிலத் தேர்தல்களை முன்னிட்டு அடை யாள அரசியலை தூண்டி, இதை அரசியல் பலனுக்காக பயன்படுத்துகிறார்கள் என்றும் விமர்சகர்கள் சுட்டிக்காட்டு கின்றனர். அனைவரையும் ஒன்றிணைக்க வேண்டிய தேச சின்னங்களின் பெயரை அரசியல் ஆயுதமாக மாற்றுவது தேவையற்ற பிரிவினை மற்றும் பதட்டத்தை உருவாக்கும் எதிர்மறை விளைவுகளைக் கொண்டது என்பதால் இதை எதிர்க்கிறோம்.

‘வந்தே மாதரம்’ ஆனந்தமட் என்ற நாவலில் இருந்து வந்த பாடல் என்பதை இந்த சபை நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு குடிமகனின் மனச்சாட்சியும்பாதுகாக்கப்படும் போது இந்தியாவின் ஒற்றுமை மிகவும் வலிமையானதாக இருக்கும் கட்டாயப்படுத்தப்பட்டால் அல்ல.

**இந்தியா தான் எங்கள் தாய் நாடு!**

இந்தியா பாகிஸ்தான் என்று இரண்டுநாடுகளாக பிரிந்தபோது இஸ்லாமியர்களான எங்களுக்கும் ஒரு நம்பிக்கை இருந்தது. இந்தியா தான் எங்கள் தாய் நாடு நாங்கள் இங்கு தான்குடி இருப்போம் என்று தீர்மானமாக முடிவெடுத்து, எங்கள் முன்னோர்கள் இந்தியாவில் அவர்கள் வாழ்வை தொடர்ந்தனர். பெரும்பான்மை சமூகத்தினர் எங்கள் சகோதரர்கள் என்ற நம்பிக்கையில் தான் எங்கள் குடும்பங்கள் தொடர்ந்து வசித்தன. ஆனால் ஒவ்வொரு விவாதத்திலும், ஒவ்வொரு கணக்கெடுப்பிலும் எங்களை தீக்குளிக்கச் சொல்கிறீர்கள் எங்களின் நாட்டுப் பற்றை சந்தேகப்படுகிறீர்ங்கள், அதை நாங்கள் உங்களுக்கு நிருபித்து கொண்டே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்.



எந்த இடங்களையெல்லாம் நாங்கள் பாதுகாப்பாக உணர்ந்தோமோ, அங்கே பெரும்பான்மை மக்களை எங்களுக்கு எதிராக திருப்ப முயற்சி செய்கிறீர்கள். எங்களுடைய தாய் திருநாட்டில் எங்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற உணர்வை தருகிறீர்கள். வந்தே மாதரத்தின் புகழ் பாடும் இந்த தருணத்தில் நீங்கள் அனைவரும் இன்குலாப் ஜிந்தாபாத் என்ற முழக்கத்தை கொடுத்த Hazrath Mohani, சுதந்திர போராட்டத்திற்கு தன் எழுத்தால் வலிமை சேர்த்த Maulana Abdul Kalam Azad, Quaide Milleth என்று அழைக்கப்பட்ட Mohammed Ismail, இந்தியாவின் தேசியக் கொடியை உருவாக்கிய இஸ்லாமிய பெண், சுரைய்யா தியாப்ஜி இவர்களை நாம் நினைத்து பார்க்கவேண்டும்.

**உண்மையான ஒற்றுமை வரலாற்று எடுத்துக்காட்டு!**

திப்பு சுல்தான் மற்றும் வேலு நாச்சியார் இருவருக்கும் மத வேறுபாடுகள் இருந்தாலும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக ஒன்றிணைந்து போராடினர். உண்மையான ஒற்றுமையின் அருமையை காட்டும் வரலாற்று எடுத்துக்காட்டு.

அக்பர் மன்னன் இந்தியாவில் ‘தீன் இ இலாஹி’ எனும் அனைத்து மத சமத்துவக் கொள்கையை கொண்டு வந்து, எல்லா மதங்களையும் சமமாக மதிக்கும் நிர்வாகத்தை உருவாக்கினார். அவர் எந்த குடிமகனையும் ஒரு குறிப்பிட்ட மதச் சின்னத்தையும், பாடலையும், சடங்கையும் பின்பற்றக் கட்டாயப்படுத்தவில்லை; இருந்தாலும் அவரது ஆட்சி இந்தியாவை இதுவரை இல்லாத வகையில் ஒன்றிணைத்தது.

அமித் ஷா அவர்கள் ‘ஆசாதி கா அமிர்த்மஹோத்சவ்’ பற்றி பெருமையாகப் பேசுகிறார். ஆனால், ஒரு நாட்டின் உண்மையான பெருமை விழாக்களில் அல்ல, நெருக்கடியில் மக்களை எப்படி காப்பது என்பதில் தான் வெளிப்படும். ‘கோவிட்’ நெருக்கடியில் மக்கள் ஆக்ஸிஜன், மருத்துவ படுக்கைகள் தேடி அலைந்த போது போக்குவரத்து முற்றிலும் நிறுத்தப்பட்டதால், ஆயிரக்கணக்கான குடியேற்ற தொழிலாளர்கள் சாலைகளில் உணவின்றி, தண்ணீரின்றி சிக்கிக் கொண்டனர். பேருந்துகள், ரயில்கள் இல்லாததால் மக்கள் நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர்கள் நடந்து வீடு திரும்ப வேண்டியிருந்தது. இது ஒரு மாபெரும் துயரமாக இருந்தது.

**நாட்டை எப்படி முதலிடத்திற்கு கொண்டு செல்வீர்!**

அம்ரித்கால் என்று பிரதமர் அவர்கள் கூறுகிறார்; அதன் வழியாக இந்த நாட்டை உலகின் முதலிடத்திற்கு நான் கொண்டு செல்வேன் என்றும் சொல்கிறார். ஆனால் தனது மகனின் உயிரற்ற உடலை மற்றொருமாநிலத்திற்கு கொண்டு செல்ல முடியாத ஒரு தந்தையின் கதறலை விமான நிலையத்தில் பார்த்த போது, நீங்கள் எப்படி இந்த நாட்டை முதல் இடத்திற்கு கொண்டு செல்வீர்கள் என்று புரியவில்லை.

அமித் ஷா குழந்தை களுக்கு ‘வந்தே மாதரம்’ மூலம் நாட்டுப் பற்று உணர்வுகளை உணர்வு ஊட்ட சொல்கிறார். National Family Health Survey 5 தரவுகளின் படி, இந்தியாவில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் சுமார்35% பேர் ஊட்டச்சத்து குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்போது நாட்டுப்பற்று உணர்வு மட்டுமல்ல, உணவு, ஊட்டச்சத்து, மருத்துவ பராமரிப்பு மற்றும் பாதுகாப்பான வளர்ச்சி தான் குழந்தை களுக்கான அவசியம்.

**விளையாட்டுத் துறையை அவமதிக்கும் செயல்!**

1936 பெர்வின் ஒலிம்பிக்ஸ் ஹாக்கியில் இந்தியா தங்கம் வென்றது என்று உள்துறை அமைச்சர் கூறினார், இந்தியா வெற்றி பெற்றது பாடலின் காரணமாக அல்ல.

அசாதாரண திறமை, கூட்டு முயற்சி மற்றும் Dhyan Chand போன்றவீரர்களின் களத்திறமை தான் வெற்றிக்குகாரணம். இதை பாடலுக்கு ஒப்பிட்டு கூறுவது வீரர்களின் திறமையையும், இந்திய விளையாட்டு வரலாற்றையும் அவமதிக்கும் செயல்.

எப்பொழுதெல்லாம் இந்த நாட்டில் பொருளாதார வீழ்ச்சி ஏற்படுகிறதோ, பிரச்சினைகள் எழுகிறதோ, அப்பொழு தெல்லாம் நீங்கள் ஓடி ஒளியும் ஒரே யொரு இடம் நேரு –முஸ்லிம்கள். இந்தமுறை ஜின்னா! உங்களுடைய கூற்றின்படியே நேருவின் பின்னால் நீங்கள்ஒளிந்து கொண்டு இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்; இந்த நாட்டின் விடுத லைக்காக நேரு பல ஆண்டுகள் சிறையில் இருந்தார்.

**தமிழ்த்தாய் வாழ்த்து!**

உங்கள் முன்னோர்களையே நீங்கள் மதிப்பதில்லை, ஏற்றுக் கொள்வதில்லை.

நாங்கள் அப்படியல்ல. எங்கள் இயக்கத் தலைவர்கள் எந்தக் கொள்கைகளில் முன்நின்றார்களோ, அதை இன்று வரை எங்கள் தலைவர் முதல்வர் அவர்கள் பின்பற்றிக் கொண்டிருக்கிற நிலையில் நாங்கள் இருக்கிறோம். மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை எழுதிய தமிழ்த்தாய் வாழ்த்தை, தமிழ்த்தாய் வாழ்த்தாக அறிமுகப்படுத்துவதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் முயற்சி செய்தபோது, ”ஆரியம் போல் வழக்கொழிந்து என்றவரியை எடுத்துவிட்டு, அந்தப் பாடலை நம் தமிழ்த்தாய் வாழ்த்தாக வடிவமைத்தார். எங்களுடைய திராவிட மாடல் அரசு, எங்களுடைய ஆட்சி, எந்த ஒரு மக்களையும் இழிவுபடுத்தக் கூடாது; அனைவரும் சமம்; யாருடைய மனமும் புண்படக்கூடாது என்பதற்காக அந்தச் சொற்களை நீக்கினார்.

ஒன்று சொல்லிக் கொண்டு அமர விரும்பு கிறேன். மார்ட்டின் லூதர் கிங் அவர்கள் தனது பிரசித்தி பெற்ற உரையில் ”எனக்கு ஒரு கனவு இருக்கிறது என்று கூறியிருந்தார். தலைவர் அவர்களே, எங்களுக்கும் ஒரு கனவு இருக்கிறது இந்த நாட்டில் சக மனிதர்களோடு, சகோதரர்களோடு, இந்தநாட்டின் குடிமக்களாக ஒற்றுமையாக இணைந்து பயணிக்க வேண்டும்; இந்தநாட்டை அடுத்த கட்ட முன்னேற்றத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்பதே அந்தக்கனவு.

இவ்வாறு ராஜாத்தி சல்மா பேசினார்.




மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதி கோ.புதூர் பகுதியில் 10 வது வட்ட செயலாளர் V.C.மாதவன் ஏற்பாட்டில் பகுதி செயலாளர் N.M. புண்ணியமூர்த்தி வரவேற்பில் 81 ஆம் பாகம் (B.L.A.2) சாகுல் ஹமீது BLC இளைஞர் அணி மகளிர் அணி கலந்து கொண்டு என் வாக்கு சாவடி வெற்றி வாக்கு சாவடி கூட்டம் நடைபெற்றது. இதில் மதுரை வடக்குத்தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கம்பம். செல்வேந்திரன் முன்னாள் மேயர் பெ.குழந்தை வேலு (உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்) தலைமையேற்று விளக்கவுரை ஆற்றினர். கழகத் தீர்மானக் குழு செயலாளர் அக்ரி கணேசன் ஏ .கே .ஆறுமுகம் பொதுக்குழு உறுப்பினர் புதூர்.தீபக் (சுற்றுச்சூழல் அணி) ஆகியோர் முன்னிலை வகித்தனர். இளைஞரணி நிர்வாகிகள் கேசவன், பிரசன்னா, சுரேஷ் பாபு ,செந்தில், கருப்பு, முரசொலி நரசிம்மன்,சித்திக் அமின்,ராஜேஷ் கண்ணா, மாரிமுத்து மணிகண்டன், தேவி, பிரேமா, செல்வி, ஜமால், நாகூர், காட்டு ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். D.தீபாதீபக் நன்றி கூறினார்.

---

# தளபதி மு.க.ஸ்டாலின் ஆட்சி - தமிழர்களுக்கு வழங்கும் புத்தாண்டுப் பரிசு!

## கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!



ஒரு செய்தி வந்திருக்கிறது

ஒவ்வொரு தமிழனின் உயரத்தையும்
ஒரு சென்ட்டி மீட்டர்
உயர்த்துகிற செய்தி

இந்திய ரிசர்வ் வங்கியின்
புள்ளி விவரம்
சொல்லிச் செல்லும் செய்தி

மாநில உள்நாட்டு உற்பத்தியில்
முதல் மாநிலமாகத்
தமிழ்நாடு திகழ்கிறது என்ற
தங்கச் செய்தி

மராட்டியம் குஜராத்
கர்நாடகம் என்ற
முன்னேறிய மாநிலங்களை
முந்தி நிற்கிறது தமிழ்நாடு

2024-25 இல் தொடர்ந்து
முதலிடத்தில் இருக்கிறது

16 விழுக்காடு வளர்ச்சிபெற்று
என்றும் பதினாறாய் இலங்குகிறது

இது
தளபதி மு.க.ஸ்டாலின் ஆட்சி
தமிழர்களுக்கு வழங்கும்
புத்தாண்டுப் பரிசாகும்;
திராவிட மாடல் ஆட்சியின்
தீராத சாட்சியாகும்

இந்த வளர்ச்சி
தளபதி காணப்போகும்
வெற்றிக்கு விலாசம் எழுதும்

மகிழ்கிறேன்;
வாழ்த்துகிறேன்

“தந்திரம் யாவையும்
முறியடித்து எங்கள்
தளபதி ஆளும் தமிழ்நாடு
இந்திய மாநிலம்
அனைத்தையுமே - இன்று
முந்தி முடிக்கும் தமிழ்நாடு”

என்று பாரதி மொழியில்
கவிதை எழுதி
முதலமைச்சருக்கு
முகமன் கூறுகிறேன்

வெல்க தமிழர்கள்
வளர்க தமிழ்நாடு



கவிப்பேரரசு
**வைரமுத்து**

---

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கீதாஜீவன் அறிவிப்பு!

*தூத்துக்குடி, டிச. 14-*

*அவரது அறிவிப்பு வருமாறு:-*

*தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி ஆலோசனை கூட்டம் தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கீதாஜீவன் தலைமையில் அமைச்சர் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் K.கவிதா தேவி முன்னிலையில் வருகிற 16.12.2025 - செவ்வாய்க் கிழமை) காலை 11.30 மணியளவில் நடைபெறுகிறது.*



*இக்கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக மகளிர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுபடி கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள்:*

*1. தூத்துக்குடி பாராளு மன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பிறந்தநாள் விழா.*

*2.வரைவு வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு.*

*3.கழக வளர்ச்சிப் பணி*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*



விழுப்புரம் தெற்கு மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம், வெட்டுக்காடு ஊராட்சியில் உள்ள வாக்கு சாவடி எண்கள் 257, 258 ”#என்_வாக்குசாவடி_வெற்றி_ வாக்குசாவவடி பரப்புரையை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன் கௌதமசிகாமணி அவர்கள் சாதனை விளக்க துண்டு பிரசுரங்களை வழங்கினார். தொகுதி பார்வையாளர் சிவ.ஜெயராஜ், ஒன்றிய செயலாளர் ஜெய.ரவிதுரை, ஒன்றிய குழு தலைவர் சங்கீதா அரசி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் வெங்கடேசன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் சபரிமுத்து, மாவட்ட இலக்கிய அணி ராஜசேகர், கிளைச் செயலாளர்கள் கார்த்திகேயன், வீரமுத்து, மார்கண்டேயன், வாக்குசாவடி முகவர்கள் பிரகாஷ், அஜித்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி, விளாத்திகுளம் பேரூர் கழகம் பாகம் எண் 198 ராஜீவ் நகரில் நடைபெற்ற என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி நிகழ்வில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி.மார்க்கண்டேயன் கலந்து கொண்டார். நிகழ்வில் விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.